# நான் கிறிஸ்துவுக்குள் இருப்பதால், தேவனுடைய கிருபையினாலே….

நீல் T. ஆன்டர்சன் எழுதிய "அடிமைத்தனத்தை முறிப்பவர்" ,"இருளின் மீது வெற்றி" புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது

ரோமர்

நான் நீதிமானாக்கப்பட்டிருக்கிறேன் – முற்றிலுமாக மன்னிக்கப்பட்டு நீதியுள்ளவன் ஆக்கப்பட்டிருக்கிறேன் (5:1).

நான் கிறிஸ்துவுடனே கூட மரித்தேன், என் வாழ்வில் பாவம் ஆளுகை செய்யாதபடிக்கு பாவத்தின் வல்லமைக்கு மரித்திருக்கிறேன் (6:1–6).

நான் என்றென்றுமாய் ஆக்கினைத் தீர்ப்புக்கு நீங்கலாக்கப்பட்டிருக்கிறேன் (8:1).

1 கொரிந்தியர்

நான் தேவனுடைய கிரியையினாலே கிறிஸ்துவுக்குட்படுத்தப்பட்டிருக்கிறேன் (1:30).

தேவனால் எனக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனுடைய ஆவியானவரைப் பெற்றிருக்கிறேன் (2:12).

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

எனக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது (2:16).

நான் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டிருக்கிறேன்

நான் என்னுடையவன் அல்ல, நான் தேவனுக்கே சொந்தமானவன் (6:19,20)

2 கொரிந்தியர்

நான் தேவனாலே கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தப்பட்டு, அபிஷேகிக்கப்பட்டு, முத்திரிக்கப்பட்டிருக்கிறேன், அதற்கு அடையாளமாக, வரப்போகும் சுதந்திரத்திற்கு அச்சடையாளமாக பரிசுத்த ஆவியானவரும் எனக்கு அருளப்பட்டிருக்கிறான். (1:21, எபேசியர் 1:13,14).

நான் மரித்திருக்கிறேன், ஆதலால் இனி நான் எனக்காக அல்ல, கிறிஸ்துவுக்காகவே வாழ்கிறேன் (5:14,15).

நான் நீதியாக்கப்பட்டிருக்கிறேன் (5:21).

கலாத்தியர்

கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன். இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது வாழுவது கிறிஸ்துவினுடைய ஜீவனே (2:20).

எபேசியர்

நான் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன் (1:3).

நான் பரிசுத்தமுள்ளவனும் குற்றமில்லாதவனுமாய் இருக்கும்படி உலகத் தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொள்ளப்பட்டேன் (1:4).

நான் தேவனுடைய சுவிகாரப் புத்திரனாகும்படி அவரால் முன் குறிக்கப்பட்டுள்ளேன் (1:5).

நான் மன்னிக்கப்பட்டு, மீட்படைந்திருக்கிறேன், அவரது மட்டற்ற கிருபை எனக்கு அருளப்பட்டுள்ளது. (1:6–8).

நான் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறேன் (2:5).

அவர் என்னை கிறிஸ்துவுடனே கூட எழுப்பி, அவரோட கூட உன்னதங்களில் உட்காரவும் செய்தார் (2:6).

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

ஆவியானவராலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்துள்ளது (2:18).

நான் தைரியத்தோடும், திட நம்பிக்கையோடும், சுதந்திரமாகவும் தேவனிடத்தில் சேரலாம் (3:12).

கொலோசெயர்

நான் இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கப்பட்டு கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறேன் (1:13).

அவருடைய இரத்தித்தினாலே என் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு நான் மீட்பைக் கண்டடைந்திருக்கிறேன், என் பாவக்கடன் எல்லாம் செலுத்தித் தீர்ந்தது (1:14).

நான் கிறிஸ்துவில் வேர்கொண்டு, அவருக்குள் கட்டப்பட்டு வருகிறேன் (2:7).

நான் கிறிஸ்துவுக்குள் பரிபூரணமுள்ளவனாய் இருக்கிறேன் (2:10).

நான் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு, அவரோடே கூட மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டிருக்கிறேன் (2:12, 13).

நான் கிறிஸ்துவுடனே கூட மரித்தேன், அவரோடே கூட எழுப்பப்பட்டிருக்கிறேன். இப்பொழுது என் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. இப்பொழுது கிறிஸ்துவே என் ஜீவனாயிருக்கிறார் (3:1–4).

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்

2 தீமோத்தேயு

எனக்குப் பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவி கொடுக்கப்பட்டுள்ளது (1:7).

அவர் தம்முடைய தீர்மானத்தின்படி என்னை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார் (1:9, தீத்து 3:5).

எபிரெயர்

பரிசுத்தம் செய்கிறவரும், பரிசுத்தம் செய்யப்படுகிற நானும் ஒருவராலே உண்டாயிருக்கிறபடியால், என்னைத் தம் சகோதரன் என்று சொல்ல அவர் வெட்கப்படுகிறதில்லை (2:11).

இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யவும் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டடையில் சேரும் சிலாக்கியம் எனக்கு உண்டு (4:16).

2 பேதுரு

நான் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவனாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் எனக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன (1:4).

மேற்கண்டவை இருளின் மீது வெற்றி (ஆசிரியர், நீல். T. ஆண்டர்சன்) என்ற புத்தகத்திலிருந்து எடுத்தாளப்பட்டது.

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்